**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 400/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 01.07.2025.**

| | |
|---|---|
| **Name : Raja** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்ராஜாயப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் பொடையன் தெருவில் குடியிருந்து மூட்டை தூக்கும் கூலி வேலை செய்கிறேன். கடந்த 09.07.2022ம் தேதியன்று நான் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து நானும் என் மனைவியும் தூங்கிவிட்டோம். பக்கத்து வீட்டில் என் அண்ணன், அப்பா ஆகியோர் குடியிருந்து வருகிறார்கள். அன்றையதினம் இரவு 11.00 மணிக்கு ஆஜரில் உள்ள எதிரிகள் வந்து எங்கள் வீட்டு கதவை தட்டினார்கள். பிறகு வெளியே வந்து பார்த்த போது அவர்கள் என்னை கெட்ட வார்த்தையால் தெவிடியா, கண்டார ஒலி பையா என்று பேசினார்கள்.

2) எதற்காக திட்டுகிறீர்கள் என்று கேட்ட போது காரணம் ஏதுமின்றி திட்டுவதாக சொன்னார்கள். மணிகண்டன் மற்றும் கணேசன் இருவரும் என்னை கட்டையால் வாய் மீது அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். மோகன்ராஜ், கணேசன் இருவரும் ஓட்டை எடுத்து என் பின் தலையில் மற்றும் முதுகில் அடித்தார்கள். என் மனைவி சுமதி வந்து ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்ட போது அவர்களையும் கீழே தள்ளிவிட்டு என் மனைவியையும் தெவிடியா கண்டார ஒலி என்று பேசினார்கள். மணிகண்டன், கணேசன் இருவரும் கட்டையால் என்னை வாய் மீது அடித்து காயம் ஏற்படுத்தினார்கள்.

3) என்னை அடித்த பிறகு ஓடு அங்கேயே தூக்கி வீசிவிட்டு சென்றுவிட்டார்கள். என் அண்ணன் என்னை ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார். முதலுதவி சிகிச்சை முடித்த பிறகு மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்காக சேர்ந்த போது ஜலகண்டாபுரம் காவல் துறையினர் வந்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

4) காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். ஆஜரிலுள்ள எதிரிகள் தான் அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். திறந்த நீதிமன்றத்தில் உள்ள ஓடு மற்றும் கட்டையால் தான் என்னை அடித்தார்கள் என்று சாட்சி அடையாளம் காட்டினார். கட்டை **சா.பொ.1 ஆகும்.** ஓடு **சா.பொ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

5) சம்பவம் நடந்த அடுத்த நாள் என்னை போலீசார் மேட்டூர் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அப்பொழுதும் தற்போது நீதிமன்றத்தில் சொன்னவாறு தான் சொன்னேன். போலீசார் விசாரணையிலும் கணேசன், மணிகண்டன் ஆகிய இருவரும் தான் என் உதட்டில் அடித்தார்கள் என்று கூறினேனா என்றால் அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. போலீசார் சொல்லி தான் தெரியும். எதிரிகளின் பெயர் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். போலீசார் மருத்துவமனையில் விசாரித்த போது ஆஜரிலுள்ள 4 எதிரிகள் பெயரும் தனக்கு தெரியாது என்று தான் கூறினேன்.

6) யார் யார் எங்கெங்கு அடித்தார்கள் என்று பெயரை குறிப்பிட்டு போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் ஆமாம். கட்டை, ஓடு ஆகியவற்றை போலீசாருக்கு நான் அடையாளம் காட்டினேனா என்றால் ஆமாம். எப்போது அடையாளம் காட்டினேன் என்றால் சம்பவம் நடந்து மூன்று நாட்கள் கழித்து வீட்டிடம் சென்று அடையாளம் காட்டினேன். வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றும் 10.07.2022ம் தேதி

அனுமதிக்கப்பட்டு 16.07.2022ம் தேதி தான் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டதாக மருத்துவ குறிப்பில் உள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியாது.

7) நான் மூட்டை தூக்கும் வேலை சேலத்தில் செய்கிறேன். எனது இரு சக்கர வாகனத்தை ஜலகண்டாபுரம் பேருந்து நிலையத்தில் நிறுத்திவிட்டு பேருந்து மூலம் சேலம் செல்வேனா என்றால் என்னிடம் இரு சக்கர வாகனம் இல்லை. வழியில் செல்லும் நபர்களிடம் உதவி கேட்டு அவர்களுடன் இரு சக்கர வாகனத்தில் சென்றுவிடுவேன். எனக்கு குடிப்பழக்கம் உள்ளதா என்றால் இல்லை.

8) போலீசார் விசாரணையில் நான் வேலை முடித்து வீட்டிற்கு என் இரு சக்கர வாகனத்தில் வரும் போது ஜெகநாதன் மகன் ஹரி என்பவரை இடிப்பது போல் வந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். எதிரிகள் அடித்ததில் எனக்கு ஏற்பட்ட காயம் சிறிய காயமா, பெரிய காயமா என்றால் பெரிய காயம் ஏற்பட்டது. உடனடியாக ஏன் மருத்துவமனையில் சேரவில்லை என்றால் உதடு உடைந்து போனது இரவு ஊசிபோட்டால் ரத்தம் நின்றுவிடும் என்பதால் வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் சொல்வது தவறு என்றும் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல.

9) நான் உண்மையில் மருத்துவமனைக்கு சென்றிருந்தால் போலீசார் மருத்துவ குறிப்பை வழக்கு கோப்பில் சேர்த்திருப்பார்கள் என்றும் அவ்வாறு போகாததால் தான் அதனை சேர்க்கவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எத்தனை மணிக்கு வேலைக்கு சென்று மாலை எத்தனை மணிக்கு வீட்டிற்கு வருவேன் என்றால் காலை 8 மணிக்கு சென்றுவிட்டு இரவு 8 மணி சுமாருக்கு ஜலகண்டாபுரம் பேருந்து நிலையத்திற்கு வந்துவிடுவேன். ஜலகண்டாபுரம் பேருந்து நிலையத்திலிருந்து வீட்டிற்கு எவ்வாறு செல்வேன் என்றால் நடந்து சென்றுவிடுவேன் அல்லது யாரிடமாவது லிப்ட் கேட்டு சென்றுவிடுவேன்.

10) வழக்கிற்காக தவறுதலாக சொல்கிறேன் என்றும் என்னிடம் இரு சக்கர வாகனம் உள்ளது என்றும் நான் மது போதையில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற போது ஜெகநாதன் மகன் ஹரி என்பவரை இடித்து நானும் கீழே விழுந்துவிட்டேன் என்றும் இதன் காரணமாக தான் என் உதட்டில் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. மதுபோதையில் இருந்ததால் தான் உடனடியாக மருத்துவமனைக்கு செல்லாமல் மறுநாள் பகல் 12.20 மணிக்கு சென்றேன் என்று சொன்னால் சரியல்ல.

11) எதன் மூலமாக என் அண்ணனுடன் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் பேருந்தில் சென்றேன். போலீசார் விசாரணையில் என்னை மருத்துவமனையில் சேர்த்தது என் மனைவி மற்றும் தகப்பனார் என்று சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். நான்கு எதிரிகளும் என் வீட்டு முன்பாக வந்து கேட்கவில்லை என்றும் ஜெகநாதன் என்பவர் தான் அவர் பகுதி மக்கள் சிலரை அழைத்து வந்து ஏன் என் மகன் மீது இடித்துவிட்டீர்கள் என்று கேட்டார் என்றும் அதன் காரணமாக ஜெகநாதன் என்பவர் என் மீது புகார் கொடுத்துவிடுவார் என்று பயந்து பெயர் தெரியாத நான்கு பேர் வந்து மிரட்டியதாக போலீசாரிடம் சொன்னேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை.

12) நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் ஆஜர் எதிரிகள் என் வீட்டிற்கு வந்து அடிக்கவில்லை என்றால் சரியல்ல.எதிரிகள் என்னை கெட்ட வார்த்தை பேசிய சமயம் எத்தனை பேர் இருந்தனர் என்றால் குருசாமி, செந்தில், என் அப்பா மாரப்பன், சரவணன், செல்வி, சுமதி ஆகியோர் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் என் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம். போலீசார் விசாரிக்கும் போது எதிரிகள் என்னை கெட்ட வார்த்தையால் பேசியதால் என்னால் வீட்டை விட்டு வெளியே வர முடியவில்லை என்றும் எனக்கு அவமானமாக போய்விட்டது என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 400/2024**

**Prosecution witness : அ.சா.2** **Date : 01.07.2025.**

| | |
|---|---|
| **Name : Sumathi** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொடையன் தெருவில் குடியிருந்து வீட்டிலிருந்து வருகிறேன். அ.சா.1 என் கணவர். என் கணவர் மூட்டை தூக்கும் வேலை செய்கிறார். கடந்த 09.07.2022ம் தேதியன்று என் கணவர் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து நானும் என் கணவரும் தூங்கிவிட்டோம். பக்கத்து வீட்டில் என் மச்சாண்டார், மச்சாண்டார் மனைவி, என் மாமனார் ஆகியோர் குடியிருந்து வருகிறார்கள். அவர்களும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அன்றையதினம் இரவு 11.00 மணிக்கு ஆஜரில் உள்ள எதிரிகள் வந்து எங்கள் வீட்டு கதவை தட்டி எங்களை வெளியே வா என்று சொன்னார்கள். பிறகு வெளியே என் கணவர் வந்து பார்த்த போது ஆஜர் எதிரிகள் என் கணவர் வண்டியில் சென்ற போது இடித்ததாக சொல்லி திட்டினார்கள். அவர்கள் என் கணவரை கெட்ட வார்த்தையால் தெவிடியா, கண்டார ஒலி பையா என்று பேசினார்கள்.

2) என் கணவர் என்ன என்று கேட்பதற்கு முன்பாகவே என் கணவர் முகத்தில் கட்டையால் 2ம் எதிரி உதட்டில் அடித்தார் ரத்தம் வந்தது. என் கணவரின் பின் மண்டையில் ஓட்டைக் கொண்டு அடித்தார்கள். அப்போது இருட்டாக இருந்ததால் யார் அடித்தது என்று எனக்கு தெரியாது. 1 மற்றும் 2 எதிரிகளை

நான் வந்து ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்ட போது அவர்கள் என்னையும் கீழே தள்ளிவிட்டார்கள். என்னையும்  தெவிடியா கண்டார ஒலி என்று பேசினார்கள். நான் கீழே விழுந்த போது சத்தம் போட்ட நிலையில் அதனை கேட்டு என் மச்சாண்டார் மனைவி செல்வி, மச்சாண்டார் சரவணன் வந்தார்கள்.

3) என் கணவரை அடித்த பிறகு ஓடு அங்கேயே தூக்கி வீசிவிட்டு சென்றுவிட்டார்கள். என்னையும் என் கணவரையும் சரவணன் மற்றும் மாரப்பன் ஆகியோர்  ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார். என் கணவர் முதலுதவி சிகிச்சை முடித்த பிறகு மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்காக சேர்த்தார்கள். எனது கணவரை மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்த போது ஜலகண்டாபுரம் காவல் துறையினர் வந்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.  ஆஜரிலுள்ள எதிரிகள் தான் அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். திறந்த நீதிமன்றத்தில் உள்ள ஓடு மற்றும் கட்டையால் தான் என் கணவரை அடித்தார்கள் என்று சாட்சி அடையாளம் காட்டினார்.   போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

5) என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் நீதிமன்ற விசாரணையிலும் சொன்னேன் என்றால் ஆமாம். என் கணவரிடம் என்ன வண்டி உள்ளது என்றால் சம்பவ சமயத்தில் என் கணவரிடம் வாகனம் எதுவும் இல்லை. எங்களை அடிக்கும் போது நாங்கள் இருவர் மட்டுமே இருந்தோம் என்றால் ஆமாம்.

6) ஆஜரிலுள்ள எதிரிகளின் பெயர் எனக்கு தெரியாது. போலீசார் சம்பவம் நடந்த மறுநாள் மேட்டூர் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். அந்த விசாரணையில் எதிரிகளின் பெயரை கூறினேனா என்றால் அருகில் உள்ளவர்களை விசாரித்து சொன்னேன். அருகில் உள்ளவர்கள் யார் என்றால்

தற்போது நினைவில்லை. வழக்கமாக என் கணவர் எப்போது வேலைக்கு செல்வார் என்றால் காலை 8 மணிக்கு சென்றுவிட்டு மாலை 7 மணிக்கு வீட்டிற்கு வந்துவிடுவார். என் கணவர் வேலைக்கு சென்றுவிட்டு வரும் போது ஹரி என்பவர் மீது இடித்துவிட்டதாக கேள்விப்பட்டேனா என்றால் இல்லை.

7) என் கணவரை எந்தெந்த எதிரிகள் எந்தெந்த இடத்தில் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் நான்கு எதிரிகளும் அடித்தார்கள். இருட்டில் எந்தெந்த எதிரிகள் உடம்பில் எங்கெங்கு அடித்தார்கள் என்று பார்க்க முடியவில்லை. சம்பவம் நடந்த அன்று என் கணவருடன் யார்யார் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் எனது கணவர், நான், மற்றும் எனது மச்சாண்டார் சரவணம் மற்றும் எனது மாமனார் மாரப்பன் ஆகியோர் சென்றோம்.

8. என்னையும், எனது கணவரையும் ஒரு இருசக்கர வாகனத்திலும், எனது மச்சாண்டார் மற்றும் எனது மாமனார் மற்றொரு இருசக்கர வாகனத்திலும், ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டு எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தோம் என்றால் நள்ளிரவு 12.30 மணி சுமாருக்கு சென்றுவிட்டு 2.00 மணி சுமாருக்கு வந்துவிட்டோம்.

9. என் கணவருக்கு எங்கெங்கு காயம் ஏற்பட்டது என்றால் உதட்டில் வீங்கிய காயமும், பின் தலையில் வீக்கமாகவும் இருந்தது. அடுத்தநாள் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் பேருந்தில் அ.சா.1, நான், மற்றும் மாரப்பன் என்பவரும் சென்றோம். நான் சொல்வது போல் சொல்லும் நேரத்தில் சம்பவம் ஏற்படவில்லை என்றும், எனது கணவர் கொடுத்த தவறான புகாருக்கு நான் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. வழக்கிற்காக தவறுதலாக சொல்கிறேன் என்றும் எனது கணவரிடம் இரு சக்கர வாகனம் உள்ளது என்றும் அவர் மது போதையில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற போது ஜெகநாதன் மகன் ஹரி என்பவரை இடித்து அவர் கீழே

விழுந்து  இதன் காரணமாக தான் அவர் உதட்டில் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. மதுபோதையில் இருந்ததால் தான் உடனடியாக மருத்துவமனைக்கு செல்லாமல் மறுநாள் பகல் 12.20 மணிக்கு சென்றார் என்று சொன்னால் சரியல்ல.

11) ஜெகநாதன் என்பவர் தான் அந்த பகுதி மக்கள் சிலரை  அழைத்து வந்து ஏன் என் மகன் மீது இடித்துவிட்டீர்கள் என்று அ.சா.1யை கேட்டார் என்றும் அதன் காரணமாக ஜெகநாதன் என்பவர் என் கணவர் மீது புகார் கொடுத்துவிடுவார் என்று பயந்து பெயர் தெரியாத நான்கு பேர் வந்து மிரட்டியதாக போலீசாரிடம் சொன்னார் என்றால் அசா.1 அவ்வாறு சொல்லவில்லை.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C. 400/2024**

**Prosecution witness : அ.சா.3** **Date : 01.07.2025.**

| | |
|---|---|
| **Name : செந்தில்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொடையன் தெருவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் மாமா ஆவார். அ.சா.2 என் மாமா மனைவி ஆவார். என் மாமா மூட்டை தூக்கும் வேலை செய்கிறார். கடந்த 09.07.2022ம் தேதி நான் வீட்டிலிருந்த போது இரவு 10.00 மணிக்கு சத்தம் கேட்டது. நான் என்னவென்று வெளியே வந்து பார்த்த போது ஆஜரில் உள்ள எதிரிகள் அ.சா.1 உடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். இரு தரப்பிலும் வாக்குவாதம் நடந்தது.

2) ஆஜர் எதிரிகள் அ.சா.1 மற்றும் 2 யை பார்த்து தகாத முறையில் தெவிடியாபையா, கண்டாரஒலி பையா என்று திட்டினார்கள். பிறகு அ.சா.1யை நான்கு பேரும் சேர்ந்து கட்டை, ஓடு ஆகியவற்றை கொண்டு தலை மற்றும் முகத்தில் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். அ.சா.2யை கெட்ட வார்த்தையால் பேசி ஆஜர் எதிரிகள் தள்ளிவிட்டார்கள். நான் சம்பவத்தை நேரில் பார்த்து விலக்கிவிட்டேன். பிறகு நான் வீட்டில் இருந்தேன். ஆஜரிலுள்ள எதிரிகள் தான் அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். திறந்த நீதிமன்றத்தில் உள்ள ஓடு மற்றும் கட்டையால் தான் என்

கணவரை அடித்தார்கள் என்று சாட்சி அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) இந்த வழக்கு சம்மந்தமாக என்னை போலீசார் என்று எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் அன்றையதினம் இரவே விசாரித்தார்கள். சம்பவம் நடந்த இரவே சம்பவயிடத்திற்கு போலீசார் வந்திருந்தார்கள். அதன் பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. யார் யார் ராஜாவின் உடம்பில் எந்தெந்த பாகத்தில் எந்தெந்த ஆயுதத்தால் அடித்தார்கள் என்றால் இருட்டாக இருந்ததால் நான் பார்க்கவில்லை.

4) போலீசார் சம்பவம் நடந்த அன்று இரவு என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. எதிரிகளை கைது செய்ய தான் அங்கு வந்தார்கள். போலீசார் வந்த சமயத்தில் எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். ஓடு, கட்டை ஆகியவற்றை எதிரிகள் எடுத்துச் சென்றுவிட்டார்களா என்றால் சம்பவயிடத்தில் போட்டு விட்டு சென்றுவிட்டார்கள். நான் சொல்வது போல் சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் ஆஜர் எதிரிகள் அ.சா.1யை நான் சொல்லும் விதத்தில் அடிக்கவில்லை என்று சொன்னாலும் அசா.1 என் பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 400/2024**

**Prosecution witness : அ.சா.4** **Date : 01.07.2025.**

| Name : சரவணன் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொடையன் தெருவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் தம்பி ஆவார். அ.சா.2 என் தம்பி மனைவி ஆவார். என் தம்பி மூட்டை தூக்கும் வேலை செய்கிறார். கடந்த 09.07.2022ம் தேதி நான் வேலைக்கு சென்றுவிட்டு திரும்பி வந்து வீட்டிலிருந்த போது இரவு 11.00 மணிக்கு சத்தம் கேட்டது. நான் என்னவென்று வெளியே வந்து பார்த்த போது ஆஜரில் உள்ள எதிரிகள் அ.சா.1 உடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

2) ஆஜர் எதிரிகள் அ.சா.1 மற்றும் 2 யை பார்த்து தகாத முறையில் தெவிடியாபையா, கண்டாரஓலி பையா என்று திட்டினார்கள். பிறகு அ.சா.1யை நான்கு பேரும் சேர்ந்து கட்டை, ஓடு ஆகியவற்றை கொண்டு தலை மற்றும் வாய் பின்பக்கம் மற்றும் முகத்தில் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். அ.சா.2யை கெட்ட வார்த்தையால் பேசி ஆஜர் எதிரிகள் தள்ளிவிட்டார்கள். நான் சம்பவத்தை நேரில் பார்த்து விலக்கிவிட்டேன். நான் காயம்பட்ட தம்பியை இரு சக்கர வாகனத்தில் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்து பின்னர் மேல் சிகிச்சைக்காக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தேன். ஆஜரிலுள்ள எதிரிகள் தான் அடித்தார்கள் என்று

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். திறந்த நீதிமன்றத்தில் உள்ள ஓடு மற்றும் கட்டையால் தான் என் கணவரை அடித்தார்கள் என்று சாட்சி அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) இந்த வழக்கு சம்மந்தமாக என்னை போலீசார் என்று எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் சம்பவம் நடந்த அன்று இரவு வீட்டில் வைத்து விசாரித்தார்கள். அதன் பின்னர் போலீசார் விசாரித்தனரா என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன்.

4) நான் தூங்கிக் கொண்டிருந்த போது சம்பவம் நடந்ததா என்றால் ஆமாம். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் ஆமாம். என் தம்பி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். நான் வெளியே வரும் போது எதிரிகள் ஓடிபோய்விட்டார்கள். அடிப்பட்டவுடன் மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனத்தில் நானும் அ.சா.1ம் சென்றோம்.

5) அடுத்த நாள் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு யார் யார் சென்றோம் என்றால் அ.சா.1, அ.சா.2 நான் மற்றும் அ.சா.5 ஆகியோர் பேருந்தில் சென்றோம். நான் சொல்லும் விதத்தில் சொல்லும் நேரத்தில் ஆஜர் எதிரிகள் அ.சா.1யை அடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 400/2024**

**Prosecution witness : அ.சா.5** **Date : 01.07.2025.**

| | |
|---|---|
| **Name : Marappan** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொடையன் தெருவில் குடியிருந்து தறி ஓட்டி வருகிறேன். அ.சா.1 என் மகன் ஆவார். அ.சா.2 என் மருமகள் ஆவார். என் மகன் மூட்டை தூக்கும் வேலை செய்கிறார். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக என் மகன் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து குடும்பத்துடன் தூங்கிக் கொண்டிருந்த போது பக்கத்து வீட்டில் நானும், என் மனைவி, பேரன், பெரிய மகன், பெரிய மருமகள் ஆகியோர் இருந்த சமயத்தில் இரவு 11.00 மணிக்கு சத்தம் கேட்டது. நான் என்னவென்று வெளியே வந்து பார்த்த போது ஆஜரில் உள்ள எதிரிகள் வந்து தகாத முறையில் வந்து என் மகன் மற்றும் மருமகளை தெவிடியாபையா, கண்டாரஒலி பையா என்று திட்டினார்கள்.

2) பிறகு என் மகனை நான்கு பேரும் சேர்ந்து கட்டை, ஓடு ஆகியவற்றை கொண்டு தலை மற்றும் முகத்தில், உதடு, பல்லில் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். என் மருமகளை இழிவாக பேசி கீழே தள்ளிவிட்டு அடிக்க ஆரம்பித்தார்கள். அப்போது நாங்கள் சென்று விலக்கிவிட்டோம். என் மகனை ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். என் மகனை முதலுதவி சிகிச்சை

முடித்த பிறகு மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்காக சேர்த்தோம். ஆஜரிலுள்ள எதிரிகள் தான் அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். திறந்த நீதிமன்றத்தில் உள்ள ஓடு மற்றும் கட்டையால் தான் என் கணவரை அடித்தார்கள் என்று சாட்சி அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) இந்த வழக்கு சம்மந்தமாக என்னை போலீசார் என்று எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் மேட்டூர் அரசு மருத்துவமனையில் வைத்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு அடுத்த நாள் விசாரித்தார்கள். அதன்பின்னர் விசாரிக்கவில்லை. போலீசாரிடம் தற்போது நீதிமன்றத்தில் சொன்னவாறு தான் சொன்னேன் என்றால் ஆமாம்.

4) நான்கு எதிரிகளும் அ.சா.1யை உடம்பில் எந்த இடத்தில் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு என் மகனை யார் அழைத்து சென்றார்கள் என்றால் என் மூத்த மகன் சரவணன் அழைத்து சென்றார். மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அ.சா.1யை யார் அழைத்து சென்றார்கள் என்றால் அ.சா.2 மற்றும் நான் அழைத்து சென்றோம். எதில் சென்றோம் என்றால் பேருந்தில் அழைத்து சென்றோம்.

5) அ.சா.1க்கு எங்கெங்கு காயம் பட்டது என்றால் உதடு, கன்னம், வலது காதுக்கு பின்புறம் அடிப்பட்டிருந்தது. போலீசாரிடம் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் கேள்விப்பட்டு தான் வந்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மருமகள் அ.சா.2 சுமதியும் சத்தம் கேட்டு தான் நான் வந்ததாக நீதிமன்ற சாட்சியத்தில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

6) நான் சொல்வது போல், சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் ஆஜர் எதிரிகள் நான் சொல்லும் விதத்தில் அ.சா.1யை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக தவறுதலாக சொல்கிறேன் என்றும் எனது மகனிடம் இரு சக்கர வாகனம் உள்ளது என்றும் அவர் மது போதையில்

இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற போது ஜெகநாதன் மகன் ஹரி என்பவரை இடித்து அவர் கீழே விழுந்து இதன் காரணமாக தான் அவர் உதட்டில் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. மதுபோதையில் இருந்ததால் தான் உடனடியாக மருத்துவமனைக்கு செல்லாமல் மறுநாள் பகல் 12.20 மணிக்கு சென்றார் என்று சொன்னால் சரியல்ல.

7) ஜெகநாதன் என்பவர் தான் அந்த பகுதி மக்கள் சிலரை அழைத்து வந்து ஏன் என் மகன் மீது இடித்துவிட்டீர்கள் என்று அ.சா.1யை கேட்டார் என்றும் அதன் காரணமாக ஜெகநாதன் என்பவர் என் மகன் மீது புகார் கொடுத்துவிடுவார் என்று பயந்து பெயர் தெரியாத நான்கு பேர் வந்து மிரட்டியதாக போலீசாரிடம் சொன்னார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.